31st March 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் நஷ்ட ஈடு கொடுப்பதை நிர்ணயிப்பது இல்லை. இதை கலெக்டர் தான் நிர்ணயிக்கிறார். ஆகையால் இதில் சர்க்கார் தலையிடுவதற்கு ஒன்றும் இல்லை. இதில் ஏதாவது புகார்கள் இருக்குமானால் தனிக் கேள்வி போட்டால் சர்க்கார் விசாரணை செய்வார்கள்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know from the Hon. Minister when these acquisition proceedings will be over. In view of the urgency of the matter, will the Government find out the possibility of adopting a quicker method by which these things would be completed?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் மக்கள் ஒத்துழைத்தால் மேலும் கடுமையான சட்டங்கள் இயற்றத் தேவையில்லை. இந்த திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை உணர்ந்து கொள்ளாததால் சில எதிர்ப்புகள் இருக்கின்றன. சட்டசபை அங்கத்தினர்களை இந்த விஷயத்தில் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* 476 *Q.*—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received any representations recently from the evicted agriculturists of the Neyveli Lignite area that the compensation paid to them is inadequate and that it should be increased; and

(*b*) if so, the action taken thereon ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Representations have been received from the ryots affected by acquisition of lands at the Neyveli Lignite area.

(*b*) The matter is under consideration.

SRI A. GOVINDASAMY : அந்தப் பகுதி மக்கள் சர்க்காரோடு பூரணமாக ஒத்துழைக்க தயாராக இருக்கிறார்கள். 28 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப் போகும் இந்தத் திட்டத்தில் காம்பென்சேஷனுக்காக 2–3 கோடி ரூபாய் ஒதுக்கி, அங்கு இருக்கும் மக்களின் ஒத்துழைப்பைப் பெறும் வகையில் தற்போது உள்ள காம்பென்சேஷனை உயர்த்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் ஓரளவுக்கு கஷ்டம் இருக்கிறது என்பதை சர்க்கார் உணர்ந்து இருக்கிறது. ஏனென்றால் 1947–ம் வருஷத்திய மதிப்பீட்டின்படி காம்பென்சேஷன் கொடுப்பதால் தொகை குறைவாகத்தான் இருக்கிறது. காம்பென்சேஷன் கொடுக்கும் விஷயம் மத்திய சர்க்காரைச் சேர்ந்தது. லிக்னைட் கார்பரேஷன் அவர்களைச் சேர்ந்தது. இது விஷயமாக மாகாண சர்க்கார் வேண்டியவற்றை எடுத்துச் சொல்வதற்கு முன் வருவார்கள்.

SRI S. LAZAR : சார், காம்பென்சேஷனை நிர்ணயிப்பதற்கு சர்க்காருக்கு ஏதாவது உரிமை இருக்கிறதா ? **Is it not a matter for judicial discretion or is it governed by the Land Acquisition Act ?**

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, that is so. Where representations are made that they are very hard hit, there will be no harm in the Government being a little more liberal.

[31st March 1958

SRI A. GOVINDASAMY : இந்தப் பகுதியிலிருந்து வெளியேறின வர்கள் விவசாயம் செய்வதற்கு வேண்டி அரசாங்கம் என்னென்ன வசதிகள் செய்து தந்திருக்கிறது. ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தக் கேள்வியை கனம் ரெவினியூ அமைச்சர் அவர்களிடத்தில் போடவேண்டும். 'ரிஹபிலிடேஷன்' அவரைச் சேர்ந்தது. காம்பன்ஸேஷன் மட்டும் தான் என்னைச் சேர்ந்தது. காரயாங்குடி பிரதேசத்தில் விவசாயம் செய்வதில் கஷ்டம் இருப்பதாக புகார்கள் வந்திருக்கின்றன. குடியிருப்பு வசதி சரியாக இல்லை என்றும் புகார்கள் வந்திருக்கிறது. இவைகளை உணவு விவசாய இலாகா விசாரணை செய்து கொண்டிருக்கிறது.

SRI P. S. CHINNADURAI : இந்த திட்டத்தினால் வெளியேற்றப்பட்ட விவசாயிகளுக்கு சுற்றுவட்டாரத்தில் நிலங்கள் வாங்கிக் கொடுத்து விவசாயம் செய்ய ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சுற்று வட்டாரத்தில் அவர்களுக்கு நிலங்கள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டு ஏகர் நிலம் வரை பறிக்கப்பட்டிருந்தால் அந்த இரண்டு ஏகர் நிலம் வாங்கிக் கொடுக்கப்படுகிறது. அதற்கு மேல்பட்ட நிலங்களுக்கு காம்பென்சேஷன் தொகை கொடுக்கப்படுகிறது. அதைக் கொண்டு அவர்கள் நிலம் வாங்கிக் கொள்கிறார்கள்.

SRI K. B. S. MANI : இந்த இடத்தை அவர்கள் அதிகமாக 'இம்ப்ரூவ்' பண்ணக்கூடாது என்ற சட்டம் இயற்றி 15 வருஷமாகிறது. அதாவது 1943-லிருந்து 1958 வரைக்கும். சட்டம் இயற்றி இவ்வளவு வருஷங்களாகியும் விவசாயத்துறையிலுள்ளவர்கள் விவசாயத்திற்கு வேண்டி ஓரளவு செப்பனிட்டால் அவர்கள் அதிக லாபம் அடையக் கூடிய காரணத்தால்...........

MR. SPEAKER : நீங்கள் சொல்வதெல்லாம் மந்திரியின் பதிலில் இல்லை மூலக் கேள்வியிலும் இல்லை. அப்படி இருக்கும் போது நீங்கள் இப்படிப்பட்ட கேள்வியை எப்படி போடலாம். ஆகவே, தனிக் கேள்வியாகப் போடுங்கள்.

SRI K. B. S. MANI : மத்திய சர்க்கார் காம்பென்சேஷன் கொடுக்கப் போவதாகச் சொல்லுகிறார்கள். அதனால் நமக்கு அவர்கள் காம்பென் சேஷன் கொடுப்பதை உயர்த்துவதற்கு நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : காம்பென்சேஷனை நிர்ணயம் செய்ய வேண்டியது கலெக்டருடைய பொறுப்பு. காம்பென் சேஷன் கொடுக்க வேண்டியது லிக்னைட் கார்ப்பரேஷன் பொறுப்பு. மக்க ளுக்கு கஷ்டம் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவது நம்முடைய சர்க்கார் பொறுப்பு.

SRI M. SELVARAJ : அங்குள்ளவர்கள் கொடுத்த மகஜரில் என்னென்ன கோரிக்கைகளை கேட்டிருக்கிறார்கள் என்பதை தெரிவிக்க முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : அதில் சுமார் பத்து அல்லது பனிரெண்டு கோரிக்கைகள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமான சில வற்றை சொல்லுகிறேன்—

(1) காம்பென்சேஷன் கொடுத்திருப்பது குறைவாக இருக்கிறது.

(2) செக் கொடுப்பதற்கு முன்னால் யாரையும் வெளியேற்றக்கூடாது.

(3) வீடுகளை வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு வேறு வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு முன்னதாக அவர்களை வெளியேற்றக்கூடாது.

(4) நத்தத்தில்..........அதற்கு சரியானபடி சொல்ல முடிய வில்லை. இன்னும் எவ்வளவோ கோரிக்கைகள் இருக்கின்றன.

31st March 1958]

Sri A. GOVINDASAMY : இந்த அரசாங்கம் முந்திரிச் செடிகளை வளர்ப்பதில் அதிக அக்கரை காட்டி வருகிறது. முந்திரித் தோட்டம் மூலமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 800 லாபம் கிடைக்கிறது. அந்த அளவுக்கு இந்த அரசாங்கம்.........

Mr. SPEAKER : I am sorry the question is out of order. The hon. Member may put a separate question.

(Sri A. Govindasamy rise.)

Mr. SPEAKER : I must tell the hon. Member it is open to the Chair to rule a question out of order. When I say a question does not arise, it does not arise. If the hon. Member persists then I will call the next question.

Sri A. GOVINDASAMY : முந்திரிச் செடி அந்தப் பகுதியில் அதிகமாக வளருகிறது. அந்த அளவில் முந்திரி தோட்டத்தை வைத்து வளர்ப்பவர்களுக்கு ரூ. 800 லாபம் கிடைக்கிறது. அதைப் பயிரிடுகிறவர்களுக்கு. . .

Mr. SPEAKER : I have already said that the question does not arise. He will have to put a separate question. நான் சொன்ன பிறகு கனம் அங்கத்தினர் உட்காரவில்லையென்றால் அதற்கு ஒரே ஒரு மருந்துதான் இருக்கிறது. அந்த மருந்து அடுத்த கேள்விக்குப் போகவேண்டியதுதான்.

Mounttain springs

* 477 *Q*.—**Sri V. K. KOTHANDARAMAN** : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any investigations have been made to locate springs on the slopes of mountains; and

(*b*) if so, where ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No investigation has so far been made to locate springs on the slopes of mountains in this State.

(*b*) Does not arise.

Sri V. K. KOTHANDARAMAN : வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள பல மலைச்சாரல்களில் ஊற்றுகள் இருக்கின்றன. 1954–ம் ஆண்டில் அங்கே மோர்தனா என்கிற மலைச்சாரலில் அப்படிப்பட்ட ஊற்றுகள் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவில்லை. இப்பொழுது அதை எடுத்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய சர்க்கார் முன் வருவார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இஞ்சினீயரின் ரிப்போர்ட்டில் அந்த விதமான தண்ணீர் ஊற்றுகள் இல்லை என்று சொல்லியிருக்கிறார். அதனால் சர்க்கார் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. ஏதாவது ஒரு பக்கத்தில் ஊற்றுக்கள் இருந்து அங்கே இருக்கக்கூடியதை கனம் அங்கத்தினர் கண்டுபிடித்து அதைப்பற்றி தனியாக கேள்வி போட்டால் அதைப் பற்றி கவனிக்கப்படும்.

Mr. SPEAKER : இல்லை என்று கனம் மந்திரி பதில் சொல்லும்போது உப கேள்விகள் போட்டால் எப்படி பதில் சொல்லமுடியும்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : செங்கற்பட்டு ஜில்லா காம்பாக்கம் பிரதேசத்தில் மலைப் பிரதேசத்தில் இம்மாதிரியான ஊற்று இருக்கிறது என்று அங்குள்ள கலெக்டர் அதைப்பற்றி பரிசீலனை செய்து